# மாகாணக் கல்வித் திணைக்களம்

# வடக்கு மாகாணம்

# Provincial Department of Education – Northern Province

## மூன்றாந் தவணைப் பரீட்சை 2025

| | | |
|---|---|---|
| **தரம் 10** | **கர்நாடக சங்கீதம்**<br>**பகுதி I , II** | **நேரம் - 3 மணித்தியாலங்கள்மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்**<br>**சுட்டெண் ……………………** |

## பகுதி - 1

- **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. கண்ட நடைக்குரிய சொற்கட்டு
   1. தகிட 2. தகதிமி 3. தகதகிட 4. தகதகிடதகதிமி
2. ஆரோகண அவரோகணத்தில் இரண்டு ஸ்வரங்கள் விலக்கப்பட்ட இராகம்
   1. சம்பூர்ணம் 2. ஷாடவம் 3. ஸ்வராந்தரம் 4. ஔடவம்
3. ஏழு தந்திகளையுடைய வாத்தியம்
   1. வீணை 2. புல்லாங்குழல் 3. நாதஸ்வரம் 4. வயலின்
4. “சிவபெருமானே..” என்ற சஞ்சாரி கீதம் அமைந்த தாளம்
   1. ரூபகம் 2. ஆதி 3. திரிபுடை 4. ஜம்பை
5. “பேரின்பப்” பதங்களை இயற்றிய வாக்கேயகாரர்
   1. புரந்தரதாஸர் 2. பாபநாசம்சிவன் 3. முத்துத்தாண்டவர் 4. பாரதியார்
6. தமிழிசையில் நிலை எனப்படுவது
   1. ஸ்தாயி 2. ஸ்வரம் 3. தாளம் 4. சுருதி
7. வில்லுப்பாட்டு நிகழ்சியில் பயன்படுத்தப்படும் வாத்தியத் தொகுதிகளுள் சரியானது
   1. வில்லு, நாண், வீணை 2. உடுக்கை, ஹார்மோனியம், விற்கடம்
   3. சலங்கை, டோலக், வயலின் 4. தாளம், ஹார்மோனியம், தவில்
8. ஸ்வர சஞ்சாரங்களை ஆக்குவதால் ஏற்படும் திறன் அல்லாதது
   1. ஸ்வரஞானம் 2. தாளஞானம் 3. ஸ்வரஸ்தானஞானம் 4. மனனம்
9. மிஸ்ரஜாதி அடதாளத்தின் அங்க அடையாளம்
   1. $1_3 1_3 00$ 2. $1_4 1_4 00$ 3. $1_5 1_5 00$ 4. $1_7 1_7 00$
10. “உற்றுமை சேர்வது….” என்ற தேவாரம் பாடப்பட்ட தலம்
    1. திருப்பிரமபுரம் 2. திருவானைக்கா 3. திருத்தணிகை 4. சீர்காழி

Past Papers Wiki

11. சாதாரி, நட்டராகம் ஆகிய பண்களுக்கு இணையான இராகம்

1. நவரோஜ் 2. சங்கராபரணம் 3. பந்துவராளி 4. காம்போதி

12. ஷடங்கத்தில் இடம்பெறும் அங்கங்களின் எண்ணிக்கை

1. 3 2. 4 3. 6 4. 7

13. சாமகானம் இசைக்கப்பட்ட இராகம்

1. கல்யாணி 2. கரகரப்பிரியா 3. மாயாமாளவகௌளை 4. தோடி

14. பகிர்சிருங்காரம், அந்தர்பக்தி எனும் இரட்டைத்தார்பரியத்துடன் கூடிய உருப்படி

1. ஜதீஸ்வரம் 2. ஸ்வரஜதி 3. கீர்த்தனை 4. பதம்

15. சங்கீதத்திலுள்ள தாளங்கள் அழிந்துபோகாமல் பாதுகாத்தவர்

1. சம்பந்தர் 2. அருணகிரிநாதர் 3. புரந்தரதாஸர் 4. சுந்தரர்

16. தமிழில் பஞ்சரத்தினக் கீர்த்தனைகளை இயற்றியவர்

1. தியாகராஜர் 2. முத்துத் தாண்டவர்

3. சியாமாசாஸ்திரிகள் 4. கோபாலகிருஷ்ண பாரதியார்

17. "ROSE WOOD" என்ற மரத்திலிருந்து செய்யப்படும் நாதஸ்வரத்தின் பகுதி

1. அணைசு 2. சீவாளி 3. கெண்டை 4. குழல்

18. கரகரப்பிரியா இராகத்தின் மேள இலக்கத்தை மொத்த அட்சரமாகக் கொண்ட தாளம்

1. கண்டஜாதி அடதாளம் 2. மிஸ்ரஜாதி துருவதாளம்

3. சங்கீர்ணஜாதி அடதாளம் 4. சங்கீர்ணஜாதி மட்டியதாளம்

19. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு பாடப்படும் இராகம்

1. மத்தியமாவதி 2. மோகனம் 3. ஆனந்தபைரவி 4. தோடி

20. வர்ணத்தின் பூர்வாங்கத்தில் வரும் அங்கங்களாவன

1. பல்லவி, அனுபல்லவி, முத்தாயிஸ்வரம்

2. பல்லவி, அனுபல்லவி, சரணம்

3. பல்லவி, முத்தாயிஸ்வரம், சரணம்

4. முத்தாயிஸ்வரம், சரணம், சரணஸ்வரம்

21. "தபஜபயோகம் செய்.." எனும் சரண வரிகளைக் கொண்ட உருப்படி

1. "இனி நமக்கொரு….." 2. "தேவதேவ….."

3. "உன்னைத் துதிக்க…" 4. "உள்ளமிரங்கி…."

22. ஒரு கதையினை இசையுடனும், நகைச்சுவை கலந்த உரையாடலுடனும் வெளிப்படுத்தும் பாடல்

1. வில்லுப்பாட்டு 2. இசை நாடகம் 3. நாட்டிய நாடகம் 4. அபிநயப் பாடல்

23. ஹரிபாலரால் எழுதப்பட்ட நூல்

1. சங்கீத சாராம்ருதம் 2. சங்கீத ஸுதாகரம்

3. சதுர்தண்டிப் பிரகாசிகை 4. சங்கீத மகரந்தம்

24. பதவர்ணத்தின் மறுபெயர் அல்லாதது

1. ஆட வர்ணம் 2. தான வர்ணம் 3. சௌக்க வர்ணம் 4. பதஜதி வர்ணம்

25. புல்லாங்குழலில் வாசிக்கக் கூடிய ஸ்தாயி எல்லை

1. 1 1/2 2. 2 3. 2 1/2 4. 3

26. சுத்தாங்கமாகப் பாடப்படும் பாடற் தொகுதி

1. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா 2. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, கீர்த்தனை

3. விருத்தம், வெண்பா, தேவாரம் 4. திருவாசகம், திருப்பல்லாண்டு, விருத்தம்

27. வீணையின் வாசிக்கும் தந்திகளில் பஞ்சமத் தந்தி சுருதி சேர்க்கப்படுவது

1. மத்திம ஸ்தாயி ஸட்ஜத்திற்கு 2. மத்திமஸ்தாயி பஞ்சமத்திற்கு

3. மந்திரஸ்தாயி ஸட்ஜத்திற்கு 4. மந்திரஸ்தாயி பஞ்சமத்திற்கு

28. பின்வருவனவற்றுள் வக்ர இராகமாக அமைவது

1. பிலஹரி 2. கமாஸ் 3. மத்தியமாவதி 4. ஹம்சத்வனி

29. அப்பியாசகான உருப்படிகளின் தொகுதி

1. கீதம், ஜதீஸ்வரம், ஸ்வரஜதி 2. கீதம், ஸ்வரவரிசை, கீர்த்தனை

3. ஸ்வரஜதி, கீர்த்தனை, பதம் 4. ஜண்டைவரிசை, கீதம், இராகமாலிகை

30. கல்யாணியின் நேர் சுத்தமத்திம இராகம்

1. தோடி 2. கரகரப்பிரியா 3. சங்கராபரணம் 4. பந்துவராளி

31. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A. சகல வாத்தியம்.

B. தாரரந்திரம் எனும் பாகத்தை உடையது

C. 7 தந்திகளையுடைய வாத்தியம்

D. T.R நவனீதம் வாசித்த வாத்தியம்

மேற்குறிப்பிட்ட கூற்றுக்களுள் வீணை வாத்தியத்துக்குப் பொருத்தமானது..

1. A, C 2. A, B 3. B, C 4. B, D

PAST PAPERS WIKI

32. ஹம்சத்வனியின் ஆரோகண அவரோகணம்

1. ஸரிகபநிஸ் - ஸ்நிபகரிஸ 2. ஸரிமபநிஸ் - ஸ்நிபமரிஸ

3. ஸரிகபதஸ் - ஸ்தபகரிஸ 4. ஸரிமபதஸ் - ஸ்தபமரிஸ

33. சங்கீர்ணஜாதி மட்டியதாளத்தினதும், மிஸ்ரஜாதி ஜம்பை தாளத்தினதும் மொத்த அட்சரம்

1. 24 2. 26 3. 28 4. 30

34. ஆதிதாள வர்ணமொன்றில் ஒரு ஆவர்த்தனம் எடுத்துக்கொள்ளும் அட்சரங்களின் எண்ணிக்கை

1. 30 2. 32 3. 34 4. 36

35. "சிவபெருமானே." எனும் சஞ்சாரி கீதத்தில் பமமப/ பநி/ நீ// என்னும் ஸ்வரப்பகுதிக்குரிய சாகித்தியம்

1. "அமரர் பணியும்.."
2. 'உமைமண வாளா.."
3. "தீவினை யாவும்.."
4. "தீர்த்தருள் வோனே.."

- பின்வரும் இராக வரைபடத்தின் அடிப்படையில் 36 – 39 வரையான வினாக்களுக்கு விடையளிக்குக.




36. மேற்குறிப்பிட்ட வரைபில் குறிப்பிடப்பட்டுள்ள இராகம்

1. ஹம்சத்வனி
2. மோகனம்
3. சுத்தசாவேரி
4. மத்தியமாவதி

37. மேற்குறிப்பிட்ட இராகத்தில் விலக்கப்பட்ட ஸ்வரங்கள்

1. க, ம
2. க, த
3. க, நி
4. க, ப

38. ஜன்னிய இராகப்பிரிவில் இவ் இராகத்தின் வகை

1. சம்பூர்ணம்
2. ஷாடவம்
3. ஔடவம்
4. ஸ்வராந்தரம்

39. இவ் இராகத்தில் நீர் கற்ற உருப்படி

1. "சிவபெருமானே.."
2. "இனிநமக்கொரு.."
3. "உள்ளமிரங்கி.."
4. "உற்றுமை சேர்வது.."

40. பல்லவராட்சிக் காலம்

1. 4ஆம், 5ஆம் நூற்றாண்டு
2. 5ஆம், 6ஆம் நூற்றாண்டு
3. 6ஆம், 7ஆம் நூற்றாண்டு
4. 7ஆம், 8ஆம் நூற்றாண்டு

(40×1 = 40 புள்ளிகள்)

Past Papers Wiki

## பகுதி – 11

- **வினா இலக்கம் ஒன்று கட்டாயமானது. ஏனையவற்றில் இருந்து நான்கு வினாக்களைத் தெரிவு செய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

1.

1. இந்திய சங்கீதத்தின் இரு பிரிவுகள் பற்றிக் குறிப்பிடும் நூல் எது?
2. ருத்ர – மா எனும் மேளசங்கேதத்தினை உடைய இராகம் எது?
3. ஹம்சத்வனி இராகத்தின் தாய் இராகம் யாது?
4. முத்துத்தாண்டவர் வாழ்ந்த காலப்பகுதி யாது?
5. புல்லாங்குழலில் உயர் சுருதியை உண்டாக்கும் துளை எது?
6. 8 என்னும் குறியீடு குறிக்கும் அங்கம் எது?
7. பொதுப் பண்ணிற்கு உதாரணம் ஒன்று தருக.
8. பஜனைப் பத்ததியின் தந்தை யார்?
9. கல் நாதஸ்வரங்கள் காணப்படும் கோயில்கள் இரண்டு தருக.
10. புராணம் பாடப்படும் பண், இராகம் என்பவற்றைத் தருக.

(1+1+1+1+1+1+1+1+2+2 = 12 புள்ளிகள்)

**2.** பின்வரும் இராகங்களில் **ஒன்றிற்கு** விரிவான இலட்சணம் தருக.

1. தோடி
2. மத்தியமாவதி
3. கல்யாணி (சஞ்சாரம், உருப்படி என்பன எழுதப்படல் வேண்டும்)

(12 புள்ளிகள்)

**3.** பின்வருவனவற்றில் **இரண்டிற்கு** சிறுகுறிப்பு எழுதுக.

1. வர்ஜ இராகம்
2. சபாகானம்
3. தான வர்ணம்

(6×2 = 12புள்ளிகள்)

**4.** நாதஸ்வரம் பற்றிய கீழ் வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

1. நாதஸ்வரத்தின் படம் வரைந்து பாகங்களைக் குறிக்குக.
2. இவ் வாத்தியத்தின் அமைப்பினையும், வாசிக்கும் முறையினையும் தருக.
3. இவ் வாத்தியத்தின் சிறப்புக்கள் இரண்டு தருக.
4. இவ் வாத்தியத்தை வாசிப்பதில் தேர்ச்சி பெற்றவர்கள் நால்வரின் பெயரினைத் தருக.

(4+4+2+2 = 12 புள்ளிகள்)

Past Papers Wiki

**5.** கோபாலகிருஷ்ண பாரதியாரின் வாழ்கை வரலாற்றைப் பின்வரும் விடயங்களின் கீழ் ஆராய்க.

1. வாழ்கைக் காலம்
2. பிறந்த இடம்
3. பெற்றோர்,
4. இசைப்பணி, சீடர்கள்
5. இயற்றிய உருப்படிகள், முத்திரை

(1+1+1+5+4 = 12 புள்ளிகள்)

**6.** 1. திரியாங்கங்களையும் எடுக்கும் தாளம் எது?

2. சப்த தாளங்கள் முப்பத்தைந்து தாளங்களாகும் முறையினை விளக்குக.

3. ரூபக தாளம், அட தாளம் என்பன ஜாதிபேதமடையும் முறையினை அட்டவணைப்படுத்துக.

(1+3+8 = 12 புள்ளிகள்)

**7.** நீர் கற்ற அடதாள அலங்காரத்தினை அங்க அடையாளங்களுடன் எழுதுக.

(இராகம், இயற்றியவர், அங்கங்கள், மொத்த அட்சரம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்)

**அல்லது**

இந்திய இசை வரலாற்றில் 14 ஆம், 15 ஆம் நூற்றாண்டின் கலாச்சாரப் பின்னணி பற்றி விளக்குக.

( 12 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

WWW.PastPapers.WiKi



Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library